# <u>தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை –2019 க்கு பதிவு செய்யும் முறை</u>

தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை–**2019** (TNEA-2019) முழுமையாக இணைய வழி விண்ணப்ப பதிவாகவும் மற்றும் இணைய வழி கலந்தாய்வு சேர்க்கையாகவும் அமையும். விண்ணப்பத்திற்கான தகவல்களைப் பதிவு செய்தல், பதிவு செய்வதற்கான பணத்தைச் செலுத்துதல், விருப்பமான கல்லூரி மற்றும் பாடப்பிரிவைப் பதிவு செய்தல், தற்காலிக இடஒதுக்கீட்டை ஏற்றல் அல்லது நிராகரித்தல், முடிவு செய்யப்பட்ட இட ஒதுக்கீட்டு ஆணையை பெறுதல் ஆகிய அனைத்தும் இணையவழியாகவே நடத்தப்படும். சான்றிதழ்கள் சரிபார்த்தல் ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள "**தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை உதவி மையம்**" **(TFC)** வழியாக மட்டுமே நடத்தப்படும். **விண்ணப்பதாரர்கள், சான்றிதழ் சரிபார்ப்பு தவிர மற்ற எல்லா செயல்களையும் தங்கள் வீட்டிலிருந்தோ அல்லது வேறு எங்கிருந்து வேண்டுமாயினும் இணையதள வாயிலாக பதிவு செய்யலாம்.** இணையதள வசதி இல்லாதவர்கள், எல்லா சேவைகளுக்கும் தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை உதவி மையத்தை அணுகலாம். அங்கு அவர்களுக்குத் தேவையான எல்லா சேவைகளும் கிடைக்கும்,

முழுமையான இணையவழி கலந்தாய்வு கீழ்க்காணும் பல அடுத்தடுத்த கட்டங்களைக் கொண்டது.

1. விண்ணப்பம் பதிவு செய்தல்
2. சமவாய்ப்பு எண் (Random Number) உருவாக்குதல் (by TNEA Authority)
3. பொறியியல் சேர்க்கை உதவி மையத்தில் சான்றிதழ் சரிபார்த்தல்
4. தரவரிசை வெளியிடுதல் (by TNEA Authority)
5. சேர்க்கைக்கான முன்பணம் செலுத்துதல்
6. விருப்பமான கல்லூரியையும் மற்றும் பாடப்பிரிவையும் பதிவு செய்தல்
7. குறிப்பிட்ட நாளில் தற்காலிக இட ஒதுக்கீடு செய்தல் (by TNEA Authority)
8. இட ஒதுக்கீட்டை உறுதி செய்தல் (by Candidate)
9. இறுதி ஒதுக்கீடு செய்தல் (by TNEA Authority)
10. ஒதுக்கப்பட்ட கல்லூரியில் சேருதல்

விண்ணப்பதாரர்கள் மேலே உள்ள எல்லா விபரங்களையும் அவை செய்யப்பட வேண்டிய நாட்களையும் உரிய நேரத்தில் கவனித்து செயல்பட வேண்டும். எல்லாவற்றுக்குமான முதற்படி,


விண்ணப்பத்தை பதிவு செய்தல் அதை எவ்வாறு செய்வது என்பதை இந்த குறிப்பு விவரிக்கிறது.

விண்ணப்பத்தைப் பதிவு செய்ய என்னென்ன விவரங்கள் வேண்டும் என்பதைத் தெரியப்படுத்தும் விபரப்படிவம் (Data Sheet), TNEA இணைய தளத்தில் கிடைக்கும். அதைப் பதிவிறக்கம் செய்து அதில் விபரங்களைப் பூர்த்தி செய்தபின் கணினியில் விவரங்களை வரிசையாக உள்ளீடு (Input) செய்தால், விரைவாகவும் சரியாகவும் செய்து முடிக்கலாம். TNEA உதவி மையத்திற்கு வருபவர்கள் கண்டிப்பாக இந்தப் படிவத்தைப் பூர்த்தி செய்த பின்னரே கணினியில் பதிவு செய்ய ஆரம்பிக்க வேண்டும்.


**விண்ணப்பம் பதிவு செய்தல்**

இப்போது நாம் விண்ணப்பம் பதிவு செய்வது எப்படி என்று பார்க்கலாம்.

பதிவு செய்தலை எளிதாக்க, அது பல எளிய படிகளாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்படிகளை கவனமாக தொடருங்கள். முதலாவதாக www.tneaonline.in. என்ற TNEA இணையதளத்திற்கு செல்லவும். தற்பொழுது நீங்கள் கீழே காணும் கணினி பக்கத்தை காண்பீர்கள்.



இப்போது **"Click here to New User Registration for TNEA 2019"** என்பதை கிளிக் செய்யவும். இப்போது கீழ்காணும் இணைய பக்கம் கணினி திரையில் தோன்றும். அதில் "Registration " என்ற பகுதி செய்ய வேண்டிய செயல் என்பதை தற்போது காட்டுகிறது.




விண்ணப்பப் பதிவு பயனாளர் பதிவுக்கான விவரங்கள் பதிவிடல் மேற்கண்ட இணைய பக்கத்தில் உள்ள எல்லா விபரங்களையும் சரியாக பதிவு செய்யவும். விபரங்களை பதிவு செய்கையில் கீழ்க்கண்டவற்றை மனதில் கொள்ளவும்.


1. உங்கள் பெயரை, உங்கள் பத்தாம் வகுப்பு / +2 மதிப்பெண் சான்றிதழில் உள்ளது போல பதிவு செய்யவும்.
2. மின்னஞ்சல் முகவரி என்பதில் உங்களது சரியான மின்னஞ்சல் முகவரியைக் (email Id) கொடுக்கவும். உங்களுக்கான மின்னஞ்சல் முகவரி இல்லாவிட்டால் புதிதாக ஒன்றை உருவாக்கிப் பின் பதியவும். மின்னஞ்சல் முகவரி உருவாக்குவதில் சிரமம் இருந்தால் உங்கள் பெற்றோரின் மின்னஞ்சலைப் பயன்படுத்தலாம். இந்த மின்னஞ்சல் முகவரியே

உங்கள் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரியாக கருதப்படும். இதன் மூலமாகவே எல்லாத் தகவல்களும் அனுப்பப்படும்.

3. கொடுக்கப்பட்ட அலைபேசி (Mobile Phone) எண் உங்கள் பதிவு செய்யப்பட அலைபேசி எண்ணாக கருதப்படும். இதன் மூலமாகவே எல்லா குறுந்தகவல்களும் அனுப்பப்படும்.
4. உங்களது கடவுச்சொல்லை (Password) கவனமாக உருவாக்கி கொள்ளவும். கடவுச்சொல்லானது குறைந்தது எட்டு எழுத்துகளைக் கொண்டது. அதில் ஒரு எழுத்து எண்ணாகவும், ஒரு எழுத்து சிறப்பு எழுத்தாகவும் (Special Character) மற்றும் ஓர் எழுத்து பெரிய எழுத்தாகவும் (Capital Letter) கண்டிப்பாக இருக்க வேண்டும்.
5. இங்கு கொடுக்கப்பட்ட விபரங்களைப் பின்னர் மாற்ற இயலாது. எனவே உறுதி செய்வதற்குமுன் சரிபார்த்து உறுதிசெய்யவும்.


உங்கள் பயனாளர் பெயர் (Login Id), மின்னஞ்சல் (email id), மற்றும் கடவுச்சொல் (Password) ஆகியவற்றை கவனமாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இவற்றை நீங்கள் பலதடவை பயன்படுத்த வேண்டியிருக்கும். பத்திரமாக எங்காவது எழுதிவைத்தாலும் நலம்.

இந்த விபரங்களை முடித்தபின் “SUBMIT” என்ற பட்டனை கிளிக் செய்யவும். அப்பொழுது உங்கள் அலைபேசிக்கும், மின்னஞ்சலுக்கும் ஒரு முறை பயன்படுத்தும் கடவுச்சொல் (OTP) வரும். கீழ்க்காணும் தகவல் உங்கள் கணினித் திரையில் தோன்றும். மின்னஞ்சலில் சில வேளைகளில் தகவல்கள் “Inbox”க்குச் செல்லாமல் “Spam” மெயிலுக்குப் போக வாய்ப்புண்டு, எனவே நீங்கள் அதையும் பார்க்க வேண்டும்.





"OTP எண்ணை பதிவு செய்யவும்.

இதில் "Submit" என்பதை கிளிக் செய்யவும்.




இனி நீங்கள் எப்போது வேண்டுமாயினும் TNEA இணைய தளத்தில் உங்கள் பயனாளர் பெயர்/ மின்னஞ்சல் முகவரி (Login Id/ Email Id) மற்றும் கடவுச்சொல்லை (Password) பயன்படுத்தி உள்நுழைவு (Login) செய்து கொள்ளலாம். இப்பொழுது உள்நுழைவு (Login) செய்தால் கீழ்க்கண்ட கணினி திரை தோன்றும்.




மேற்கண்ட விபரங்களை பதிவு செய்து Save & Proceed என்பதை கிளிக் செய்யவும்.


**சிறப்பு ஒதுக்கீட்டுக்கான விபரங்கள் சமர்ப்பிக்கும் பகுதி**

கீழ்க்கண்ட இணையதள பக்கத்தில் தங்களுக்கு உரித்தான விபரங்களை சரியான முறையில் பதிவு செய்து Save & Proceed என்பதை கிளிக் செய்யவும்.




## <u>பதிவுக் கட்டண பகுதி</u>


தற்பொழுது பதிவுக் கட்டணத்திற்கான இணையதள பக்கம் தங்களது கணினியில் தெரிய வரும். இதில் நீங்கள் கொடுத்த தகவலின்படி (பதிவுக் கட்டணத் தொகை + சிறப்பு இட ஒதுக்கீடு கட்டணத் தொகை) எவ்வளவு கட்டணம் செலுத்த வேண்டும் என்பதை காட்டும். இந்தத் தொகையை பற்று அட்டை/ கடன் அட்டை மற்றும் இணைய வழி வங்கிக் கணக்கு (Credit Card/ Debit Card/ Net Banking) மூலமாக செலுத்த வேண்டும். (கேட்பு வரைவோலையை (Demand Draft) TFC வழியாக மட்டுமே செலுத்த முடியும்) இதை செய்வதற்கு “ Pay Now” என்பதை கிளிக் செய்யவும், அதற்கான கணினித் திரையில் உங்கள் தகவல்களைத் தர வேண்டும்.





மேலே கண்ட திரையில் ஏதாவது ஒரு Gateway-யை தேர்ந்தெடுத்து கிளிக் செய்யலாம். செய்தால், தொகை பெறும் வங்கியின் திரை வரும். தொகையை செலுத்தி முடித்தவுடன் உங்கள் செல்பேசிக்கு விண்ணப்ப எண்ணும், பரிவர்த்தனை ஐடியும் அனுப்பப்பட்டபின் கீழ் காணும் கணினித் திரை தோன்றும்.

நிர்ணயிக்கப்பட்ட தமிழ் நாடு பொறியியல் சேர்க்கை உதவி மையம் (TFC) வாயிலாக மட்டுமே வரைவோலை (Demand Draft)அனுமதிக்கப்படுகிறது.


இதற்கு அடுத்த கட்டமாக கல்வி உதவித் தொகை வேண்டுமா என்ற விபரங்களுக்கு தகுந்த விபரங்களை சமர்ப்பித்து Save & Proceed என்பதை கிளிக் செய்து அடுத்த நிலைக்கு செல்ல வேண்டும்.




அடுத்து "School of Study Information" விபரங்களை தற்போது கீழே காணும் இணையதள பக்கத்தில் சரியாக பூர்த்தி செய்யவும்.





அடுத்து "Academic Information" விபரங்களை தற்போது கீழே காணும் இணையதள பக்கத்தில் சரியாக பூர்த்தி செய்யவும்.





நீங்கள் தொழிற்கல்வி பாடத்தில் (Vocational) படித்திருந்தால் அதற்கான விபரங்களை இணையதள பக்கத்தில் சரியாக பூர்த்தி செய்யவும்.

அடுத்து "Additional Information" விபரங்களை தற்போது கீழே காணும் இணையதள பக்கத்தில் சரியாக பூர்த்தி செய்யவும்.





Additional Information பகுதியை பூர்த்தி செய்து Save&Proceed செய்யவும்.

தற்போது பூர்த்தி செய்த விண்ணப்பத்தை (SaveTemporarily) பட்டனை அழுத்தி தற்காலிகமாக சேமித்து வைக்கலாம். மேலும் விண்ணப்பத்தில் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டியிருந்தால் (Edit Application ) பட்டனை அழுத்தி பூர்த்தி செய்யவும்.






முழுமையாக பூர்த்தி செய்த விண்ணப்பத்தை (Submit Application) பட்டனை அழுத்தி சமர்ப்பித்து விடலாம். விண்ணப்பத்தை சமர்ப்பித்தப்பின் கீழ்க்காணும் திரை தோன்றும்.




இப்போது "Download Application" என்பதில் கிளிக் செய்தால், உங்கள் முழு விண்ணப்ப படிவம் பதிவிறக்கம் செய்யப்படும். அத்துடன் சிறப்பு ஒதுக்கீட்டிற்கான படிவங்களும் கொடுக்கப்பட்டிருக்கும். அது கீழ்க்கண்டவாறு இருக்கும்.




இவைகளை அச்செடுத்துக் கொள்ளலாம். அச்செடுத்த படிவத்தில் உரிய இடத்தில் உங்கள் பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தை ஒட்டி, படிவத்தில் குறிப்பிட்டுள்ள எல்லா சான்றிதழ்களையும் அதன் நகல்களையும் உங்களுக்குக் குறிப்பிட்ட நாளில் TFC மையத்தில் சரிபார்த்து சமர்ப்பிக்க வேண்டும். இத்துடன் நீங்கள் முறையாக விண்ணப்பிக்க வேண்டியது நிறைவு பெறும்.